14th February 1959]

SRI T. P. SRINIVASAVARADAN : May I know whether the Government have got any proposal to see that that part of the Buckingham Canal which runs through the City of Madras does not any more emit foul smell?

THE HON. SRI P. KAKKAN : I think the Corporation has taken steps in regard to this matter.

SRI V. V. RAMASWAMI : இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதற்குக் கமிட்டி நியமிக்கப்பட்டதா ? அந்தக் கமிட்டியின் முடிவு என்ன? இதற்கு ஏற்படும் செலவில் மத்திய அரசாங்கம் ஏதாவது கொடுக்க முன் வருகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியில் சீப் இன்ஜினியர் (இர்ரிகேஷன்), சீப் இன்ஜினியர் (போர்ட் டிரஸ்டு), இன்ஜினியர் (கார்ப்பரேஷன்) ஆகியவர்கள் இருக்கிறார்கள். சீப் இன்ஜினியர் (இர்ரிகேஷன்) சேர்மனாக இருக்கிறார். இந்த வேலையை எவ்வளவு துரிதமாகச் செய்யலாம் என்று பரிசீலனை செய்துதான் 52 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். இதை மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

SRI MOHAMED RAZA KHAN : May I know from the Hon. the Minister for Public Works whether the river or stream—by whatever name you call it—which passes just in front of the residence of the Hon. the Minister for Finance, is called the Cooum river or the Buckingham Canal?

THE HON. SRI P. KAKKAN : It is called the Cooum river.

VIDWAN T. MUTHUKANNAPPAN : The Buckingham Canal mixes with the river.

SRI MOHAMED RAZA KHAN : Is the Hon. Minister aware that it has remained in the same condition for the last two decades in spite of important people living on the banks of the Cooum river?

THE HON. SRI P. KAKKAN : There is some improvement now.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—NON-OFFICIAL BUSINESS.

A. Bill.

THE MADRAS PRESERVATION OF HISTORICAL MONUMENTS AND OBJECTS AND EXCAVATION OF ARCHAEOLOGICAL SITES BILL, 1959.

* SRI T. PURUSHOTHAM : Mr. Chairman, Sir, I beg leave to introduce the Madras Preservation of Historical Monuments and Objects and Excavation of Archaeological Sites Bill, 1959.

MR. CHAIRMAN : The question is—

'That leave be granted for the introduction of the Madras Preservation of Historical Monuments and Objects and Excavation of Archaeological Sites Bill, 1959.'

The motion was put and carried and leave was granted.

SRI T. PURUSHOTHAM : Sir, I introduce the Bill.

MR. CHAIRMAN : The Bill is introduced.

B. Resolutions.

(1) CONSTITUTION OF A COMMITTEE FOR THE SANITARY ARRANGEMENTS MADE AT BUS-STANDS AND MARKETS.

* SRI V. V. RAMASWAMI : மன்றத் தலைவர் அவர்களே, இப்போது என் பேரில் இருக்கும் கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்தச் சபை முன்பு பிரேரேபிக்க விரும்புகிறேன்.

'This Council recommends to the Government to appoint a Committee to enquire into the adequacy or otherwise of the sanitary arrangements made at the various bus-stands and markets in the State and to report on the need for the provision of such sanitary arrangements where none exists now.'

SRI T. P. SRINIVASAVARADAN : Sir, I second it.

MR. CHAIRMAN : Resolution moved—

'This Council recommends to the Government to appoint a Committee to enquire into the adequacy or otherwise of the sanitary arrangements made at the various bus stands and markets in the State and to report on the need for the provision of such sanitary arrangements where none exists now.'

* SRI V. V. RAMASWAMI : மன்றத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மூலமாக நமது மாநிலத்திலே பல மாவட்டங்களில் இருக்கும் வண்டிப்பேட்டைகளும், வாரச் சந்தைகளும் கூடுகிற இடங்களில் இருக்கிற சுகாதார வசதிகள் எப்படி இருக்கின்றன, அவைகள் போதிய அளவு இருக்கின்றனவா, அப்படி இல்லாவிட்டால் அதற்குக் காரணம் என்ன, அதை நீக்க முடியுமா; எப்படி நீக்குவது, அதற்கு யார் பொறுப்பு என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசிக்க, அதற்குமேல் நடவடிக்கை எடுத்து நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும் வழியில் அரசாங்கத்தின் கவனத்தை இந்தப் பக்கம் இழுப்பது தான் என் நோக்கம். அதற்காகவே இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபித்திருக்கிறேன்.

பொதுவாக, இப்போது நாடெங்கும் போக்குவரத்துச் சாதனங்கள் அதிகரித்து வருகின்றன. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு இணைப்புப் பாதைகளும் போடப்பட்டு வருகின்றன. அதேமாதிரி குறுக்குச் சாலைகளும், நெடுஞ் சாலைகளாக இருக்கிற தேசீயச் சாலைகளும் தற்கால முறைப்படி செப்பனிடப்பட்டு வருகின்றன. ஆகவே, சாமான்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளும், மனிதர்கள் பிரயாணம் செய்யும் வண்டிகளும் நாளுக்குநாள் எண்ணிக்கையில் ஏறிக்கொண்டே இருக்கின்றன. பிரயாணத்திற்கு வேண்டிய வசதிகள் அதிகரிக்கவே வியாபாரப் பெருக்கமும் கூடுதலாகி வருகிறதென்று சொல்லலாம்.